## வடமாகாணக்கல்வித்திணைக்களம்
## வடமாகாணம்
## பயிற்சிவினாக்கள் தரம் - 11
## கர்நாடகசங்கீதம்

# பகுதி -01

1. இராகமாலிகையின் ஒவ்வொரு அங்கத்தின் முடிவிலும் பல்லவியின் ஆரம்ப இராகத்தில் அமையும் சிட்டைஸ்வரம்

1. மகுடசாகித்தியம் 3. ஸ்வரத்தொகுதி 2. மகுடஸ்வரம் 4. ஸ்வரபல்லவி

2. ஸகல வாத்தியம் என அழைக்கப்படும் இசைக்கருவி
1.வீணை 2. தம்புரா 3. வயலின் 4. மிருதங்கம்
3. துருவதாளத்தின் அங்க அடையாளம்
1.//00 2./0/ 3./0// 4.o/23.
4. நாட்டுப்பாடல் வகைகளை தழுவி அமைந்த பதிகங்கள்

1.தேவாரம் திருப்புகழ் திருப்பல்லாண்டு 2. வெண்பா கீதம் விருத்தம் 3. திருவம்மானை திருச்சாழல்திருப்பொன்னூஞ்சல் 4. திருவெம்பா திருவாசகம் திருவருட்பா

5.தமிழிசை இயககம் பரவிய காலம்

1. 14 ம் 15 ஆம் நூற்றாண்டு 2 7ம் 8 ஆம் நூற்றாண்டு

3. 17 ம் 18 ஆம் நூற்றாண்டு4. 15 ம் 16 ஆம் நூற்றாண்டு

6. தற்போது வழக்கிலுள்ள வயலினின் அமைப்பை முதன் முதலில் உருவாக்கியவர்
1. பாலுஸ்வாமிதீட்சிதர் 2 ஸ்ராடிவேரியஸ்
3. குன்னக்குடிவைத்தியநாதன் 4. லால்குடிஜெயராமன்

7. வேதச்சக்கரத்தில் நான்காவது இராகம
1. மாயாமாளவகௌளை 3. நாடகப்ரியா
2. ஹரிகாம்போதி 4. கரஹரப்ரியா
8. ஒன்றுக்கு மே
ற்பட்ட இராகங்களில் காணப்படும் உருப்படி வகை
1. தில்லானா 2. பதம் 3. இராகமாலிகை 4. கீதம்
9. கரிகாம்போதி இராகத்திற்குரிய பண்கள்.
1)செம்பாழை, குறிஞ்சி 2)செவ்வழி, செந்துருத்தி 3)தக்கேசி, நட்டராகம்4)பஞ்சமம், பழம்பஞ்சுரம்

10. “ஸ்வர மேள கலாநிதி” என்ற நூலை எழுதியவர்.
1)கோவிந்தாச்சாரியார் 2)சேத்ரக்ஞர3 வெங்கடமகி 4)இராமகமத்தய்யர்
.11. நாயகன், நாயகி பாவமாக அமைந்த உருப்படி எது?
1)தில்லானா 2)கீர்த்தனை 3)பதம் 4)இலட்சணகீதம்

12..அப்பியாசகானம் சபாகானம் இரண்டிற்கும் பொதுவான உருப்படி?
1)இராகமாலிகை 2)சௌக்காலக்ருதி 3)வர்ணம்4)கிருதி

13. உடுக்கு, விற்கடம் எனும் இசைக்கருவிகள் பயன்படுத்தக்கூடிய இசைநிகழ்வு.

1)நாடகம் 2)இசைக்கச்சேரி 3)வில்லுப்பாட்டு4)இசைநாடகம்

14. கண்ட ஜாதி அடதாளத்தின் மொத்த அட்சரம்
1)18 2)29 3)14 4)08

15. மத்தியமாவதி இராகத்தின் தாய் இராகம்
1)கல்யாணி 2)ஹரஹரப்ரியா 3)தோடி4)ஹரிஹாம்போதி

16. சங்கராபரண இராகத்தின் பண்.
1)தக்கேசி 2)செவ்வழி3)பழம்பஞ்சுரம4)பழந்தக்கராகம்

17. திருவிசைப்பா பாடப்படும் இராகம்.
1)கல்யாணி 2)மோகனம் 3)மத்யமாவத4)ஆனந்தபைரவி

18. ஜனக ராகங்களிலிருந்து பிறந்த இராகம்.
1)ஜனகராகம் 2)ஜன்னியராகம்3)உபாங்கராகம4)வக்ரராகம்

19. அன்னிய ஸ்வரக்குறியீடு
1)// 2) / 3)* 4)O

20. தாய் இராகத்தில் வரும் ஸ்வரங்களை மட்டும் எடுத்துக் கொள்ளும் இராகம்
1)வக்ரராகம்2)வர்ஜராகம்3)உபாங்கராகம்4)பாஷாங்கராகம்

21. ஆரோகணம் அவரோகணத்தில் ஸ்வரங்கள் வரிசைக்கிரமமின்றி திரிந்து வரும் இராகம்.
1)வர்ஜ ராகம் 2)வக்ரராகம் 3)பாஷாங்கம் 4)உபாங்கம்

22. பஞ்சமாந்திய இராகத்திற்கு உதாரணம்
1)நாதநாமக்ரியை 2)நவரோஜ் 3)குறிஞ்சி 4)மகதி

23. எல்லா ஸ்வரங்களும் கோமளமாக ஒலிக்கும் இராகம்?
1)கல்யாணி 2)மோகனம் 3)தோடி4)ஹரஹரப்ரியா

24. இந்தியாவின் தேசிய வாத்தியம்
1)வீணை 2)புல்லாங்குழல் 3)மிருதங்கம் 4)தவில்

25. வீணை வாத்தியத்தில் சிறப்புற வாசிக்க கூறப்பட்ட உருப்படிவகை
1)கீர்த்தனை 2)தில்லானா 3)தானம் 4)பல்லவி
26. வர்ணத்தில் எத்துக்கடைப்பல்லவி என அழைக்கப்படும் பகுதி
1. பல்லவி 2. அனுபல்லவி 3. சரணம் 4. முக்தாயிஸ்வரம்
27..மத்தியமாவதி இராகத்தில் பாடப்படுவது
1. திருவாசகம் 2. திருப்பல்லாண்டு3.திருவிசைப்பா 4. திருப்புராணம்
28. தந்திவாத்தியங்களில் ஒன்று
1 வீணை 2. மிருதங்கம் 3. புல்லாங்குழல் 4. நாதஸ்வரம்

29. சதுஸ்ரநடைக்குரிய ஜதி
1. தகிட 2. தகதகிட 3. தகதிமி 4. தகிடதகதிமி

30. மத்தியமாவதி இராகத்தின் ஆரோகண அவரோகணம்

1. ஸரிகபதஸ் 2. ஸரிகபநிஸ்

ஸ்தபகரிஸ ஸ்நிபகரிஸ

3. ஸரிமபநிஸ் 4. ஸரிமபதஸ்

ஸ்நிபமரிஸ ஸ்தபமரிஸ

31. அன்னியஸ்வரத்தை எடுத்துக்கொள்ளும் இராக வகை

1. வக்ரஇராகம் 2. வுர்ஜஇராகம் 3. புா'ங்கஇராகம் 4. உபாங்கஇராகம்

32. முத்துத்தாண்டவரது முதல் கீர்த்தனை
1. மோசம் போகாதே நெஞ்சே 2. பூலோககைலாசகிரி சிதம்பரமல்லாரல் 3. அருமருந்தொரு தனிமருந்து 4. இனிநமக்கொரு
33. தோடி இராகத்தின் இராகச்சாயா ஸ்வரங்கள்

1. ம த நி 2. க ம த 3. த ம நி 4. நி க த

34.. நாட்டிய கச்சேரியில் இடம்பெறும் அப்பியாசகான உருப்படி?

1. கீதம் 2. கீர்த்தனை 3.அலங்காரம் 4. ஜதிஸ்வரம்
35. கர்த்தா இராகங்களின் மொத்த எண்ணிக்கை?

1. 72 2. 73 3. 15 4. 36

36. மொத்த அட்சரங்கள் பத்தினை கொண்டுள்ள தாளங்கள்?

1. சதுஸ்ரஜாதி ரூபக தாளம், சதுஸ்ரஜாதி மட்டிய தாளம்

2. சதுஸ்ரஜாதி மட்டிய தாளம், சதுஸ்ரஜாதி ஏகதாளம்

3. மிஸ்ரஜாதி ஜம்பை தாளம், சதுஸ்ரஜாதி ரூபக தாளம்

4. சதுஸ்ரஜாதி மட்டிய தாளம், மிஸ்ரஜாதி ஜம்பை தாளம்

37. ஸ்வராந்த இராகப் பிரிவுகள் அடங்கும் இராகம்?

1. லீலாதரங்கினி2. பிலஹரி3. சுத்தசாவேரி 4. மாயாமாளவகௌளை
38.. “சங்கீத பிதாமகர்” எனப்போற்றப்படுபவர்?

1.புரந்தரதாஸர் 2. பாவநாசம்சிவன்

3. தியாகராஜசுவாமிகள் 4.முத்துத்தாண்டவர்

39. ஔடவ, ஷாடவ,சம்பூர்ண பேதங்களினால் எத்தனை வகையான வர்ஜ இராக பிரிவுகள் உண்டாகின்றன?

1. 10 2. 12 3. 07 4. 08

40. துருவ தாளத்தின் இறுதியாகவுள்ள லகுவை நீக்கினால் வரும் தாளம்?

1.மட்டிய தாளம்2. ரூபகதாளம்3. ஏக தாளம் 4. ஜம்பைதாளம்

# பகுதி – 02

எவையேனும் 5 வினாக்களுக்கு விடை எழுதுக

01.

01. மேலைத்தேச இசையில் மேஜர் ஸ்கேல் என அழைக்கப்படும் இராகம் இந்துஸ்தானி இசையில் அழைக்கப்படுவது எவ்வாறு?

02 தமிழில் நலங்கு கும்மி ஊஞ்சற் பாடல்களை இயற்றிய வாக்கேயகாரர் யார்?

03. க்ரஹத்தின் மறுபெயர் என்ன?

04. 6வது சக்கரத்தின் பெயர் என்ன?

05. எல்லா அங்கங்கங்களிற்கும் சாகித்தியத்தைக் கொண்டுள்ள வர்ணம் எது ?

06. புரிபம / நிப / நீ // பநிஸ்நி / பரி / ரீ // எனும் ஸ்வரப்பகுதிக்குரிய சாகியத்தியப் பகுதியை எழுதுக?

07. திருவிசைப்பா எத்தனையாம் திருமுறையில் அடங்குகிறது?

8. இராக தாள அமைப்புடன் எமக்கு கிடைத்த மிகப்பழமையான உருப்படி எது?

09. ஆதி காலத்தில் தமிழிசைக்கு பக்கவாத்தியமாக பயன்படுத்தப்பட்ட இசைக்கருவிகள் எவை?

10. 14 ம் நூற்றாண்டில் இந்திய சங்கீதத்தில் ஏற்பட்ட இரு பிரிவுகளும் எவை?

2.

1. இசைக்கச்சேரிகளில் பிரதான பக்க வாத்தியமாக பயன்படுத்தப்படும் இசைக்கருவி எது?

2) இவ்வாத்தியத்தில் பிரபல்யமான இந்திய இசைக்கலைஞர்கள் இருவரைக் குறிப்பிடுக

3) இவ்வாத்தியத்தின் படத்தினை வரைந்து பாகங்களைக் குறிப்பிடுக.

4) இவ்வாத்தியத்தின் அமைப்பு சிறப்பினை விளக்கிச் சுருதி சேர்க்கும் முறையினையும் விளக்குக.

3.

1) 72 மேளகர்த்தா சக்கரத்தில் 9வது சக்கரத்தின் பெயர் யாது?

2) அச்சக்கரத்தின் நேர் சுத்தமத்திமச் சக்கரத்தின் பெயர் யாது?

3) குறிப்பிட்ட சுத்த மத்திமச் சக்கரத்தின் மேள எண்கள், இராகங்கள், ஸ்வரஸ்தானங்கள் என்பவற்றை ஒழுங்காக எழுதுக.

4.

1. ஹரிகாம்போதி இராகத்தின் மேள எண்?

2. இவ் இராகத்தின் பண்கள்?

3. இந்த இராகத்தின் ஆரோஹண அவரோஹணம்?

4. இந்த இராகம் அமைந்துள்ள சக்கரம்?

5. இந்த இராகத்தின் ஸ்வரஸ்தானங்களைக் குறிப்பிடுக?

6. இவ் இராகத்தை ஹிந்துஸ்தானி இசையில் எவ்வாறு அழைக்கப்படும்?

7. இவ் இராத்தின் மூர்ச்சனை வெளிப்படுத்தும் இராகங்கள்?

8. இவ் இராகத்தில் விசேடமாகப்பாடப்படும் உருப்படி எவ்வாறு அழைக்கப்படும்?

9. இவ் இராகத்தில் அமைந்த உருப்படிகளில் இரண்டினைக் குறிப்பிடுக?

10. இவ் இராகத்தின் ஏனைய சிறப்பம்சங்களில் மூன்றினைத் குறிப்பிடுக?

05.

தியாகராஜஸ்வாமிகளின் வாழ்க்கை வரலாற்றினையும் அவரது இசைப்டபணிகளையும் பின்வரும் விடயங்களின் கருத்திற்கொண்டு எழுதுக

1. வாழ்க்கைகாலம்
2. பிறந்தஇடம்
3. இளமைக்கல்வியும் வாழ்க்கைச்சம்பவங்களும
4. இசைப்பணிகள்
5. இவர் செய்துள்ள கொத்துக்கீர்த்தனைகள்
6. முத்திரை ரஸம்

06. 14ம் 15 ம் நூற்றாண்டின் இந்தியாவின் கர்நாடக இசையின் கலாசாரப்பின்னணி பற்றி விளக்கி எழுதுக?

07. பன்னிரண்டு ஸ்வரஸ்தானங்கள் உருவாகும் முறையை விளக்கி
16 ஸ்வரப்பெயர்களையும் ஒழுங்கு முறைப்படி எழுதுக